ஓம் சரவணஜோதியே நமோ நம

**ஆசான் அரங்கமகா ஞானியரின் அருளாசி நூலிலிருந்து**
**ஓங்காரக்குடிலின் நிர்வாகம் குறித்தும் ஓங்காரக்குடிலில் இதுகாலம் நடந்துள்ள**
**பராபவ ஆண்டு வைகாசி பௌர்ணமி பூஜை விழா**
**அன்னதானம் மற்றும் தொண்டர்கள் சேவை குறித்தும்**
**அரங்கன் என் அருளாசி விளக்கம்**
**ஆசான் அரங்கமகா ஞானியரின் அருளாசி விளக்க நூல்**

31.05.2026

1. ஆனந்த நடனமிட்ட ஈசன் பாதம்
அடிவணங்கி அரங்கன் யான் அருளாசி
வரமாக பராபவ ஆண்டு வைகாசி திங்கள்
பௌர்ணமி பூஜை நன்னாளாம்

2. விசாக நாளில் அரங்கன் யான்
அருளாசி தன்னை ஓங்காரக்குடிலின்
நிர்வாகத்திற்கும் ஓங்காரக்குடிலின்
அன்னதானம் மற்றும் தொண்டர் படை

3. பௌர்ணமி பூஜை விழா சிறப்பு குறித்தும்
அரங்கன் யான் அருளுவேன்
ஆக்கமுடன் உயர்வான
நிர்வாகம் செய்ய உத்தமமாய்

4. தொண்டர் பெருமக்களை நிர்வகிக்கும்
ஓங்காரக்குடிலின் நிர்வாகம் சிறப்பு
சத்தியமிக்க தொண்டர் படைகளை கொண்ட
அரங்கன் என் தொண்டுள்ளம் மிக்க தொண்டர்கட்கும்

5. அரங்கன் என் ஆசியும் பாதுகாப்பும் உண்டு
அவர்களுடைய தொண்டும் மிகச்சிறப்பு
வல்லமைபட வைகாசி பௌர்ணமி பூஜை விழாவில்
ஞானியர் படைகளோடு ஆறுமுகப்பெருமானும்

6. அரங்கன் என் ஜோதி தன்னில் கலந்து
இனிதே வந்த அன்பர்கட்கெல்லாம்
ஆசியும் அனுகூலமும் தந்துள்ளேன்
உத்தமனாம் என் சீடன் ராம்குமார்

7. கரம்பட உலகோர்க்கு தீட்சை பலமும்
அரங்கன் யான் இன்று வழங்கியுள்ளேன்
வல்லமைபட இந்த விழாவில்
சூட்சுமமாய் மக்கட்கு ஆசியும்

8. வரமும் அரங்கன் யான் தந்துள்ளேன்
ஓங்காரக்குடிலின் அன்னதானம் சிறப்பு
அருமருந்தாக்கி இந்த அன்னதானத்தில்
அரங்கன் யான் மகா சக்தியாய்

9. கலந்து ஆற்றல் தந்துள்ளேன்
உண்டு வந்த மக்கட்கும்
உலகோர்க்கும் பிணிகட்டம் அகன்றும்
சர்வ பாதுகாப்பும் நெடிய ஆயுளும்

10. குறையில்லாத பெருவாழ்வும் கொண்டு சிறக்க
அரங்கன் என் பரிபூரண ஆசி உண்டு
சோர்வின்றி என் தொண்டர் பெருமக்களெல்லாம்
ஆற்றலாய் இயங்க அரங்கன் யான்

11. ஆக்கம் தந்துள்ளேன் உள்ளபடி
ஓங்காரக்குடிலின் அன்னதான பலம்
உயர்ந்து சிறக்க ஆசி
இந்த தர்மத்துக்கு எக்காலமும்

12. பொருளாதார குறைவு வாரா வண்ணம்
வசூல் தொகை பெருக்கி
உலகோரிடையே அமோகமான வரவேற்பும் கூட்டி
செல்வந்தர்களெல்லாம் என் ஓங்காரக்குடிலை

13. நோக்கி வரவும் தர்மத்தில் பொருளுதவி செய்யவும்
தடையின்றி தாராள தனபுழக்கமோடு
நிர்வாகம் சிறக்கவும் தொண்டர்களெல்லாம்
மனம் மகிழும் வண்ணம்

14. அவர்கட்கு ஆக்கமும் ஆசியும் தரவும்
அரங்கன் என் பரிபூரண ஆசி உண்டு
சத்தியவான்களான இந்த குடில்
நோக்கி வரும் மக்களெல்லாம்

15. ஞானவான்களாய் ஆக்கம் பெறவும்
தனவான் பொருளாதாரபலம் மிக்கவன்
என பல ஆற்றல் பெருகவும்
அவரவர்க்கும் பரிபூரண ஆசி உண்டு

16. ஆசி தந்தேன் இந்த விழாவில்
சூட்சும வரமும் ஆசியும்

அரங்கன் யான் வழங்கியுள்ளேன்
என் விழா சிறப்பு இந்த விழாவில்

17. தொண்டாற்றிய தொண்டர் பெருமக்களும்
பல்வேறு சிறப்பு கொள்ள ஆசியுண்டு
அரங்கன் யான் அருளிய
ஆசி விளக்கம் முற்றே.

—சுபம்—

ஓம் முருகப்பெருமான் திருவடிகள் போற்றி போற்றி